# இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டான மீட்பு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மாத இதழின் மூலமாக நான் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள கிருபை செய்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

வேதத்தில் மாற்கு 14:24ல் “அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது” என்று எழுதப்பட்டுள்ளது.

ஆண்டவராகிய இயேசு பாடுபடும் முன்பதாக அவர் சொன்ன வார்த்தை என்னவெனில், “இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது”.



நம்முடைய சபைகளில் நாம் திருவிருந்தில் கலந்து கொள்வது எதற்காக என்றால், இயேசு கிறிஸ்துவின் மரணத்தை நாம் நினைவு கூறுவதாகும். இப்பொழுது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்து நாம் தியானிக்கப் போகின்றோம்.

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் செய்யப்படுகின்ற எந்த ஒரு உடன்படிக்கையும் இரத்தத்தினால் செய்யப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டிலே அவர்கள் செய்கிற பலியின் மூலம் சிந்தப்பட்ட இரத்தத்தினால் தேவனோடு உடன்படிக்கை செய்து வந்தார்கள்.

யாத் 24:6-8ல் "அப்பொழுது மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளித்து, உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள். அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்" என்று எழுதப்பட்டுள்ளது.



பழைய ஏற்பாட்டுக் காலத்தில் உள்ள ஆராதனை முறைமை என்பது, இரத்தத்தினால் செய்கிற உடன்படிக்கை ஆகும். ஆனால் அந்த யூதர்கள் கர்த்தருடைய வார்த்தையை மீறி பின்மாற்றமாய்ப் போனார்கள். மோசே உடன்படிக்கை புத்தகத்தை வாசிக்கும்பொழுது, அனைவரும் அதற்குக் கீழ்ப்படிந்து நடப்போம் என்று கூறினார்கள். ஆனால் கொஞ்ச காலத்தில் ஆண்டவரை விட்டுத் தூரமாய்ப் போய்விட்டார்கள்.

நாமும் கூட தேவனோடு உடன்படிக்கை செய்கின்றோம். அந்த உடன்படிக்கையில் நாம் நிலைத்திருக்கவேண்டுமென்பதே அவருடைய விருப்பமாயிருக்கிறது. நமக்கு அதை விட்டுப் பின்வாங்கிச் செல்வதற்கு ஏதுவான தடைகள் பல நம் வாழ்வில் வரும். அதையெல்லாம் நாம் தாண்டி செல்லவேண்டும்.

அக்காலத்திலே, ஜனங்கள் தன்னை விட்டுத் தூரம் போனாலும், தேவன் தம்முடைய மிகுந்த இரக்கத்தினால் மறுபடியும் இஸ்ரவேலரோடு செய்ய தீர்மானித்தார். இதை எரேமியா தீர்க்கதரிசியும் முன்னறிவித்தார். என்னவெனில் எரேமியா 31:31-34ல் ‘‘இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்’’ என்கிறார்.

தேவன் இங்கே கூறுவது என்னவெனில், அவர் தமது ஜனங்களோடு புதிய உடன்படிக்கை செய்யப்போகிறார். அது மோசே காலத்தில் செய்யப்பட்ட காளையின் இரத்தத்தினால் அல்ல. ஜனங்களின் உள்ளத்திலே அவர் தமது வார்த்தையை வைப்பதே அவர் செய்யும் உடன்படிக்கை. அவர் ஜனங்களின் உள்ளத்திலே நியாயப்பிரமாணத்தை எழுதி, அவர் அவர்களின் தேவனாயிருப்பார். இந்த வார்த்தைகள் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டதாகும்.

இதை தேவனாகிய கர்த்தர் தம் ஒரே பேறான குமாரனை இந்த உலகிற்கு தந்து, அவரின் மூலமாக ஒரு சொட்டு இரத்தம் கூட வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் நமக்காக சிந்தி, நமக்காக தம் ஜீவனை விட்டபொழுது, தேவனாகிய கர்த்தர் நம்மோடு உடன்படிக்கை செய்கிறார். ஆகவே எந்த ஒரு உடன்படிக்கையும் இரத்தத்தினால் செய்யப்பட்டாக வேண்டும். ஆனால் சாதாரண ஒரு காளையின் மூலமாக நம்மோடு அவர் உடன்படிக்கை செய்திருந்தால், நாம் அதை சுலபமாக அவமாக்கிப்போட்டிருப்போம். அல்லது அந்த உடன்படிக்கையை மீறி நடந்திருப்போம். அல்லது ஒவ்வொரு பாவத்திற்கும் ஒவ்வொரு காளையை பலிசெலுத்தி உடன்படிக்கை செய்திருப்போம். ஆனால் பிதாவாகிய தேவன் தம் சொந்த குமாரனை நமக்காக அனுப்பி, கிருபாதார பலியாக எல்லா இரத்தத்தையும் நமக்காக சிந்தி, நம்மோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்.

இதைத்தான் இயேசு கிறிஸ்து, அநேகருக்காக சிந்தப்படுகின்ற உடன்படிக்கைக்குரிய இரத்தமாயிருக்கிறது என்று கூறினார். எபிரெயர் 9:18-26ல் தேவன் இந்த உலகத்தின் மனிதர்களுக்காக ஒரே தரம் வெளிப்பட்டு தன்னுடைய முழுமையான இரத்தத்தைக் கொடுத்து நம்மோடு நித்திய உடன்படிக்கை செய்திருக்கிறார். இந்த சத்தியத்தை நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமே.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்கு ஒரு விசேஷித்த வல்லமை உண்டு. இது நமக்காகவும், நம் குடும்பத்திற்காகவும், நம்மை மீட்கும்படியாக சிந்தப்பட்ட இரத்தமாயிருக்கிறது. இந்த இரத்தத்தின் புண்ணியத்தினால் நாம் தேவனோடு உடன்படிக்கை செய்கிறோம்.

இந்த புதிய உடன்படிக்கையின் இரத்தத்தினால் நமக்கு கிடைக்கும் மீட்பு என்னவென்று நான் உங்கள் முன்பு வைக்க விரும்புகிறேன்.

## இரத்தத்தினால் உண்டான மீட்பு:

### 1.பாவ மன்னிப்பு:

எபேசியர் 1:7ல் “அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது” என்று எழுதப்பட்டுள்ளது. பிதாவாகிய தேவனுடைய கிருபையினால், இயேசுவின் இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இயேசுவுக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. முதலாவது மீட்பு என்னவெனில் பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்குக் கிடைக்கிறது.

இன்றைக்கும் பல இடங்களில் பாவ மன்னிப்பிற்காக பல போராட்டங்கள் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. தன் பாவக்கறையை போக்க, அநேகர் குளத்திலும், ஆற்றிலும் மூழ்குகிறார்கள். ஆனால் அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே பாவ மன்னிப்பாகிய மீட்பு மனுக்குலத்திற்கு உண்டாயிருக்கிறது. ஆகவே என் சகோதரமே, நான் பாவ மன்னிப்பு அடைந்து விட்டேன் என்று விசுவாசியுங்கள்.

பாவம் ஒரு மனிதனின் வாழ்வினில் இருந்தால், அவன் பரிசுத்தமாய் வாழ முடியாது. அவன் தேவனோடு ஐக்கியப்பட முடியாது. ஏனெனில் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிப்பதில்லை. அவன் பாவம் மன்னிக்கப்பட இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே மிக அவசியமாயிருக்கிறது.




நீங்கள் ஒருவேளை, “ஐயா 2000 ஆண்டுகளுக்கு முன்பு இயேசு இரத்தம் சிந்திவிட்டார். அதை இப்பொழுது நான் எங்கு போய் வாங்கி என் பாவத்தைக் கழுவுவது” என்று நினைக்கலாம். என் அருமை சகோதரமே, தேவனுடைய இரத்தம் ஒரு வாங்கும் பொருள் கிடையாது. இயேசுவை உங்கள் இருதயத்திலே விசுவாசித்து உங்கள் பாவங்களைக் கழுவ அவருடைய இரத்தத்தை உங்கள் மேல் தெளிக்கப்பட வேண்டினால், அந்த இரத்தம் உங்கள் பாவங்களைக் கழுவும். இந்த இரத்தத்தை நீங்கள் விசுவாசித்தால் உங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை உணரலாம். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை.

மனிதர்களிடத்தில் உங்கள் பாவத்தைக் கூறினால் வருத்தப்படுவார்களே, தவிர மன்னிக்க முடியாது. பாவத்தை மன்னிக்க அதிகாரமுள்ள ஒருவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே.

கொலோசெயர் 1:14ல் “(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது” என்று வேதம் சொல்லுகிறது. 1யோவான் 1:7-9ல் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். அதனால் புது உடன்படிக்கையின் இரத்தத்தினால் தேவனிடத்தில் சேரும் பாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

**2.பிதாவோடு ஐக்கியம்:**

எபேசியர் 2:13ல் ''முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்'' என்று வேதம் சொல்லுகிறது. தூரமாயிருக்கும் நம்மை சமீபமாக்குவதற்கு ஒரு காரியம் தேவை. உதாரணமாக, தொலைவில் உள்ள ஒரு உயர் அதிகாரியிடம் நாம் பேச வேண்டும் என்றால், நமக்குத் தெரிந்து, அந்த உயர் அதிகாரிக்கும் தெரிந்த நபரை வைத்து அவரிடம் அணுகினால் சுலபமாக அந்த உயர் அதிகாரியிடம் நம் கோரிக்கையை வைத்து விடலாம்.

அதே போல, பிதாவை நாம் நெருங்க முடியாமல் தொலைவில் இருந்தோம். ஆனால் இப்பொழுதோ இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின்மூலம் அவருக்குச் சமீபமானோம். நாம் மாம்சத்தின்படி புறஜாதியாராக இருந்தோம். நாம் தேவனோடு ஐக்கியப்படுவதற்கு தகுதியிழந்திருந்தோம். ஆனால் கிறிஸ்து இயேசுவுக்குள், அவரின் இரத்தத்தினாலே, அவரோடு ஒப்புரவாக்கி வைத்திருக்கிறார். இதுவே நாம் பெற்ற பெரிய கிருபை.

ரோமர் 8:14-16ல் ''மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்'' என்று எழுதப்பட்டுள்ளது.

என்னுடைய சொந்த பிள்ளை என்னைப் பார்த்து 'எஜமானனே' என்று அழைப்பானா? அல்லது 'அப்பா' என்று கூப்பிடுவானா? வீட்டில் உள்ள வேலைக்காரனே தன் எஜமானைப் பார்த்து எஜமானனே என்று அழைப்பானே அன்றி சொந்த பிள்ளை தன் தகப்பனைப் பார்த்து 'அப்பா' என்று அழைக்கும். இதே போல, இயேசுவின் இரத்தமும், நாம் பிதாவை நோக்கி, தேவனே என்று அழைக்காமல், அப்பா, பிதாவே என்று கூப்பிடுகிற புத்திர சுவிகாரத்தை நமக்குத் தந்திருக்கிறது. அவரின் இரத்தம் பிதாவோடு நம்மை சேர்த்தது மாத்திரமல்ல, அவருடைய பிள்ளையாக நம்மை மாற்றியிருக்கிறது. ஒருவரோடு நாம் நெருங்கி பழகுவது வேறு, அதே நபருடைய குடும்பத்தில் ஒன்றாவது வேறு. இது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கின்றேன். ஆகவே இயேசுவின் இரத்தம் தூரமாயிருந்த நம்மை பிதாவிற்கு சமீபமாக்கி, அவருடைய பிள்ளையாய் மாற்றியிருக்கிறது.

மேலும் கலாத்தியர் 4:6ல் ''மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்'' என்று வேதம் சொல்லுகிறது. மேலும் 3-7ம் வசனத்திலிருந்து இந்தக் காரியங்களை நான் உங்களுக்குத் தெளிவு செய்ய விரும்புகின்றேன்.

நாம் சிறு பிள்ளைகளாயிருந்த காலத்தில் இந்த உலக வழிபாடுகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம். நாம் இப்போது அடிமைகளாயிராமல், பிள்ளைகளாயிருக்கிறபடியினால், கிறிஸ்து மூலமாக தேவனுக்கு

சுதந்தரவாளியாக இருக்கின்றோம். ஆனால் இதற்கு முன்னர், தேவனை அறியாதபொழுது, நாம் தேவனல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தோம்.



இப்பொழுது நாம் தேவனை அறிந்திருக்கிறபடியினால், அல்லது தேவனால் அறியப்பட்டிருக்கிறபடியினால், அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டு, தேவனோடு ஐக்கியமாகிவிட்ட பின்பு, மறுபடியும் நாம் இந்த உலக நிலைக்குத் திரும்பினால், நம்முடைய நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். ஏனெனில் அடுத்த வசனம் சொல்லுகிறது, நாம் நாட்களையும், மாதங்களையும் பார்க்கிறோம் என்று. இதற்கு பல ஆவிக்குரிய அர்த்தங்கள் உண்டு. ஆனால் இதற்கு இணையாக எனக்கு உணர்த்தப்பட்டது என்னவெனில், நாம் தேவனுக்குப் பிரியமில்லாத மூட நம்பிக்கைகளுக்கு நம்மை உட்படுத்திக்கொண்டும், சபைக்கு போக்கும் வரத்துமாய், நான் தேவனுடைய பிள்ளை, இரட்சிக்கப்பட்டவன் என்று சொல்வோமேயாகில் நம்மை நாமே ஏமாற்றுகிறவர்களாய் இருப்போம். தேவ ஜனமே! தேவன் நம் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர விரும்புகிறார். இந்த உலக காரியங்களில் நமக்கு லாபமாகத் தோன்றுகிற யாவற்றையும் தேவனுக்காக நஷ்டமென்று விடவேண்டும்.

### 3.சமாதானம்:

இது நமக்குக் கிடைக்கக் கூடிய மூன்றாவது மீட்பு. கொலோசெயர் 1:20ல் ‘‘அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று’’ என்று வேதம் சொல்லுகிறது.

சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தினாலே சமாதானத்தை உருவாக்கி, நம்மையும் பரலோகத்தையும் ஒப்புரவாக்கினார். இன்றைக்கு சமாதானம் இல்லாத காரணத்தினால், அநேக குடும்பங்கள் பிரிவினையில் இருக்கின்றது. வேலை ஸ்தலத்திலும் பிரச்சனைகள். உறவுகளிடையே விரிசல், கண்ணீர், குழப்பம்.

ஏசாயா 53:5ல் நமக்கு சமாதானத்தை உண்டாக்கும் ஆக்கினை அவர் மேல் வந்தது, என்று எழுதுகிறார். மேலும் இயேசுவின் தழும்புகளால் நாம் குணமாகிறோம். ஆகவே சமாதானம் வந்துவிட்டால், இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு சுகம் தானாகவே கிடைக்கிறது.

**4.மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் சேரும் பாக்கியம்:**

நான்காவதாக, அப்போஸ்தலர் 20:28ல் ‘‘ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்’’ என்று வேதம் சொல்லுகிறது.

தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்த சபையை சாத்தான் தொடுவதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். அவர் சபையின் மீது பக்தி வைராக்கியம் கொண்டிருக்கிறார். ஏனெனில் அவர் அதை தமது இரத்தத்தை விலைக்கிரயமாகக் கொண்டு சம்பாதித்திருக்கிறார்.

உதாரணமாக, நான் ஒரு பொருளை அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கும்போது, அதை ஒருநாளும் மற்றவர்களுக்கு மிக சுலபமாக கொடுக்க மனம் வராது. அதே போல் தான் இயேசுவும், நம்மை நெருங்க பிசாசிற்கு இடம் கொடுக்க மாட்டார். தமது சபையை எளிதாக உடைப்பதற்கு தேவன் அனுமதிக்க மாட்டார்.

எபிரெயர் 10:11-22ல் சொல்லப்பட்டதுபோல, ஆசாரியன் என்பவன் நாள்தோறும் ஒரேவிதமான பலிகளை அநேகந்தரம் செலுத்துகிறவனாயிருப்பான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ தம்மையே ஒரே பலியாக தந்து, நம்மை பரிசுத்தப்படுத்தி, தம்முடைய ஆலயத்திற்குள்ளாக கிறிஸ்து மூலமாக வர, நமக்கு தைரியத்தை கொடுத்திருக்கிறார்.

அவர் தமது இரத்தத்தினாலே நமது பாவங்களை மன்னித்திருக்கிறார். ஆகவே அவர் அதை நினைக்கமாட்டார். மிக முக்கியமான காரியம் என்னவெனில், நாம் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாக பிரவேசிப்பதற்கு அவர் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக நமக்கு தைரியத்தைக் கொடுத்திருக்கிறார்.

நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு, இயேசு ஒரு மதத்தை உண்டுபண்ணவில்லை. அவர் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டுபண்ணியிருக்கிறார். இதை நீங்கள் நன்றாக புரிந்து கொள்வது அவசியம். இது எல்லா சமய ஜனங்களுக்கும் பொதுவானது. ஆகவே நாம் வாரந்தோறும் தேவனுடைய ஆலயத்திற்குள் நுழைவதற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தைரியத்தை உண்டாக்குகிறது. ஆகவே சபை கூடி வருகிறதை நாம் விட்டு விடக்கூடாது. இதை நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும்.



**5.பிதாவினிடத்தில் பரிந்து பேசுதல்:**

எபிரெயர் 12:18-24ல் “அன்றியும், தொடக்கூடியதும், அக்கினி பற்றியெரிகிறதுமான மலையினிடத்திற்கும், மந்தாரம் இருள் பெருங்காற்று ஆகிய இவைகளினிடத்திற்கும், எக்காளமுழக்கத்தினிடத்திற்கும், வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்திற்கும், நீங்கள் வந்து சேரவில்லை; அந்தச் சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்களுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள். ஏனெனில் ஒரு மிருகமாகிலும் மலையைத் தொட்டால், அது கல்லெறியுண்டு, அல்லது அம்பினால் எய்யுண்டு சாகவேண்டுமென்று சொல்லப்பட்ட கட்டளையைச் சகிக்கமாட்டாதிருந்தார்கள். மேசேயும்: நான் மிகவும் பயந்து நடுங்குகிறேன் என்று சொல்லத்தக்கதாக அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமாயிருந்தது. நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்” என்று எழுதப்பட்டுள்ளது.

ஆகவே இந்த இரத்தத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் ஐந்தாவது மீட்பு என்னவெனில் ‘நன்மையானதைப் பேசுகிற இரத்தம்’. இது பிதாவின் சமுகத்தில் நமக்காக பரிந்து பேசுகிற இரத்தம். நாம் பாவம் செய்யும் பொழுது பிதாவானவர்

நம்மீது கோபம் கொள்கிறார். ஆனால் அப்பொழுது இந்த பரிந்து பேசும் இரத்தம், பிதாவினிடத்தில் நமக்காக பேசும்.



அன்றைக்கு ஆபேலின் இரத்தம் கூப்பிட்டதினால், காயீனுக்கு சாபம் வந்தது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இங்கிருந்து பிதாவை நோக்கிக் கூப்பிடும்போது, அந்த இரத்தத்தினால் இன்றைக்கு நமக்கு ஆசீர்வாதம் உண்டாயிருக்கிறது. இந்த இரண்டு இரத்தமும் பேசினதில் நீங்கள் வித்தியாசத்தை உணரலாம். மனிதனின் இரத்தம் எப்போதும் போல குறை சொல்வதாய் இருக்கும். ஆனால் கல்வாரியில் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தமோ, 'பிதாவே, பிதாவே இவர்களுக்கு மன்னியும்' என்று கதறினது.

**6.சத்துருவின் மீது ஜெயம்:**

கடைசியாக வெளிப்படுத்தல் 12:11ல் ''மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்''

என்று வேதம் சொல்லுகிறது. பொல்லாத சாத்தானை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் ஜெயித்தார்கள்.

பிரியமானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இரத்தம் உங்கள் மேலிருந்தால், உங்கள் வாழ்வில் நீங்கள் பிசாசை ஜெயிக்கலாம். எல்லா சத்துருவின் வல்லமைகளை நாம் மேற்கொள்ளலாம். மத்தேயு 8:16ல் பிசாசு பிடித்திருந்த அநேகரை இயேசு கிறிஸ்து சொஸ்தமாக்கினார். வியாதிகளிலிருந்தும், பிசாசின் பிடியில் இருந்த அநேகரை சுகமாக்கினார். மாற்கு 3:15, லூக்கா 10:19 ல் சத்துருவின் சகல வல்லமையை மேற்கொள்ள நமக்கு அதிகாரங்கொடுத்திருக்கிறார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, ஒரு சகோதரி என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தனக்கு பிசாசின் போராட்டம் இருப்பதாகவும், தன்னால் எந்த வேலையும் சரியாக செய்ய முடியவில்லை எனவும் கூறினார்கள். அவர்களுக்க மீளாத பயம் இருந்ததேயன்றி, அதை விட்டு விடுதலையாகி வெளியே வர அவர்களால் முடியவில்லை. உடனே நான் அவர்களுக்கு, ‘உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன். நீங்கள் ஒரு காரியத்தை மாத்திரம் செய்யுங்கள். இயேசுவின் இரத்தம் ஜெயம் என்று தொடர்ந்து அறிக்கையிடுங்கள்’ என்றேன். ஜெபித்து ஒரு பத்து நிமிடங்கள் கழித்து, மறுபடியும் அவர்கள் வீட்டில் உள்ளவர்கள் என்னிடம், ‘நீங்கள் ஜெபித்து முடித்த உடன் அவர்கள் நன்றாக உறங்கி விட்டார்கள். நன்றாக இருக்கிறார்கள்’ என்றார்கள். பிரியமானவர்களே! இயேசுவின் இரத்தத்தில் அவ்வளவு வல்லமை உண்டு. ஆகவே பிசாசை ஜெயிக்கும்படி நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கும் மீட்பை எண்ணி அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

